இணைப்பு 1.

15ம் பக்கத்தில் 277ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்கு விடையைக் காண்க.

அரசின் தற்போதைய உத்தரவுகளின்படி, அரிசன மாணவர் இல்லங்களுக்குத் தேவைப்படும் உணவுப்பொருட்களை, அந்த இல்லங்கள் அமைந்திருக்கும் பகுதியிலுள்ள அல்லது அப்பகுதிக்கு அருகாமையிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து கடன் அடிப்படையில் வாங்க வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து பெற முடியாத காய்கறி போன்ற பொருள்களைப் பொறுத்த வரையில், சம்பந்தப்பட்ட விதிகளைப் பின்பற்றிய பிறகு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். நியாயமான தொலைவிற்குள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைந்திராவிடில் அல்லது கடனுகப் பொருட்கள் வழங்குவதற்கு அச்சங்கங்கள் ஆட்சேபணை தெரிவித்தால், சம்பந்தப்பட்ட மாணவரில்லக் காப்பாளர் உள்ளூரிலேயே அப்பொருள்களை வாங்கிக்கொள்ளலாம்.

1972–73 கல்வியாண்டில், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள அரசினர் மாணவரில்லங்களுக்காக, ஒப்பந்தப்புள்ளி முறை மூலமாக இரண்டாம் தர அரிசி வாங்கப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் வழங்கிய அரிசியின் தரம் மோசமாக இருப்பதாகத் தெரிய வந்தது. மாணவரில்லத்தினர் போராட்டம் மேற்கொள்வதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்தது. 1973, ஜனவரியில் மாணவரில்லம் ஒன்றிற்குச் சென்று பார்வையிட்ட திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கு வழங்கப்பட்டிருந்த அரிசி மிகவும் மோசமானதாக இருப்பதைக் கண்டார். எனவே அம் மாவட்டத்திலுள்ள மாணவரில்லங்கள் அனைத்திற்கும் தேவைப்படும் அரிசி முழுவதும் திருச்சிராப்பள்ளியிலுள்ள கூட்டுறவுச் சிறப்பங்காடியான சிந்தாமணியில் வாங்கப்படலாமென்று அவர் உத்தரவிட்டார். பின்னர், அவர், அம் மாணவவரில்லங்களுக்குத் தேவைப்படும் மளிகை சாமான்களும் அச் சிறப்பங்காடியிலேயே வாங்கப்படலாமென்றும் உத்தரவிட்டார். தரமான பொருட்கள் அங்கிருந்து வாங்கப்படுகின்றன. தரத்தைப் வைத்துப் பார்க்கும்போது, அவற்றின் விலை மலிவென்றே சொல்லப்பட வேண்டும். சிறப்பங்காடியில் பொருட்களை வாங்குவதில் ஆதாயமிருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

As per the existing orders of the Government all dietary articles required for the Government Harijan Hostels should be bought from Co-operative Societies, if any, in or near the locality, on credit basis. Articles such as vegetables which cannot be bought from Co-operative Societies can be got through contractors after observing the rules in this regard. If Co-operative Societies are not available within a reasonable distance or if the societies have objections regarding the credit system, the articles required can be purchased locally by the warden of the hostel.

2. During the academic year 1972–73 second sort rice was purchased for the Government hostels in Tiruchirappalli district through tender system. The quality of rice supplied by the tenderer was found to be bad. This was one of the factors which led the boarders to stage some agitation. The Collector of Tiruchirappalli who inspected one of the hostels in January 1973 also found that the rice supplied was of very bad quality. He, therefore, ordered that the rice required for all the hostels in the district might be bought from the Chinthamani Super Market, Tiruchirappalli, which is also a Co-operative concern. Subsequently, he ordered that provisions required for the hostels might also be purchased from the Super Market. Quality goods are obtained from the Super Market and the prices are also lower when compared with the quality. It is also found that it is advantageous to make the purchases from the Super Market.

இணைப்பு II.

30-ம் பக்கத்தில் 290-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.

(ஆ) அரசுக்குச் சொந்தமான முந்திரிக் காடுகள் கீழ்க்கண்ட பகுதிகளில் ஏலத்திற்கு விடப்படுகின்றன :—

வரிசை எண்ணும் மாவட்டமும்.	பகுதி.	முந்திரித் தோட்டங்கள் அமைந்திருக்குமிடங்கள்.
1 திருநெல்வேலி ..	திருநெல்வேலி.	சாலிக்குளம் (ஒதுக்கக் காடு).
2 ராமநாதபுரம் ..	ஸ்ரீவில்லிபுத்தூர்	புல்போதி.
3 ராமநாதபுரம் ..	திருப்பத்தூர் ..	1 காலப்பூர் 2 ஆதிகோடு. 3 வடகாட்டு செடி. 4. அம்மாச்சிப்பட்டி. 5. வேலான்குடி. 6. சேவல்பட்டி.
4 ராமநாதபுரம் ..	சிவகங்கை ..	1 காட்டுரேனி. 2 காஞ்சிராங்கள். 3 காளையார்கோவில். 4 மேலக்காடு. 5. சாத்தராசன்கோட்டை. 6 சக்கை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

128-192—13